Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: சைவநெறி

வாரம் - 4

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை K. கிருஷ்ணவேனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## கும்பாபிஷேகம்

1. கோயில் கிரியைகள் பற்றி மிகத்தெளிவாக எடுத்துக் கூறுவது.
   I. வேதம் II. ஆகமம் III. புராணம் IV. இதிகாசம்
2. சிவாகமம் கூறும் கோயிற் கிரியைகளுள் ஒன்று
   I. சரியை II. கிரியை III. நித்திய கிரியை IV. யோகம்
3. நித்தியக் கிரியை எனப்படுவது
   I. நித்தம் நிகழ்த்தப்படுவது II. விசேட காலங்களில் நிகழ்த்தப்படுவது
   III. பயன்கருதி செய்யப்படுவது IV. பயன்கருதாது செய்யப்படுவது
4. திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் செய்யப்படும் பூஜை வேளைகள்
   I. 3 II. 6 III. 9 IV. 12
5. நைமித்திய கிரியைகளுள் உள்ளடக்கப்படுவது
   I. மகோற்சவம் II. ஆராதனை III. அபிஷேகம் IV. அலங்காரம்
6. இறைவனிடத்தில் எந்தப்பயனும் கருதாது செய்யப்படும் கிரியை
   I. காமிகக் கிரியை II. நிஷ்காமிகக் கிரியை III. நித்தியக் கிரியை IV. நைமித்தியக் கிரியை
7. கும்பாபிசேகத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்
   I. கும்ப அபிஷேகம் II. கும்ப அர்ப்பணம் III. திருக்குடமுழுக்கு IV. மகோற்சவம்
8. கும்பாபிசேகத்தின் போது அபிஷேகம் செய்யப்படுவன
   I. பரிவார தெய்வங்களும், மூலமூர்த்தியும் II. மூலமூர்த்தியும், விமான கோபுர கலசங்கள்
   III. மூலமூர்த்தி, பிள்ளையார் IV. விமான கலசம், காவல் தெய்வங்கள்
9. கும்பாபிசேக கிரியைகள் செய்வதற்கு முன்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் சில
   I. பிரதிஷ்டை, காப்பு கட்டல், அந்தரியம் II. அனுக்ஞை, கணபதிபூஜை, வாஸ்து பூஜை
   III. கும்பஸ்தாபனம், அநாவர்த்தனம், ஆவர்த்தனம் IV. நித்தியபூஜை, நைமித்தியபூஜை, காமிகப்பூஜை
10. பிரதிட்சை என்பதன் பொருள்
    I. ஆலயம் அமைத்தல் II. ஆவாகனம் பண்ணுதல்
    III. நன்கு புலனாகும்படி நிற்றல் IV. அழகிய திருவுருவம்

**விடை எழுதுக.**

1. ஆகமங்கள் கூறும் மூவகைக் கிரியைகளும் எவை?
2. அம்மூவகைக் கிரியைகளையும் உதாரணம் தந்து விளக்குக.
3. கும்பாபிசேகம் செய்வதற்கு முன்னர் செய்யப்படும் கிரியைகள் எவை?
4. பிரதிஷ்டை என்றால் என்ன?
5. கும்பாபிசேகத்தின் பொருளையும் வேறு பெயர்களையும் தருக.